# பத்திரிக்கை செய்தி

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு

## விளையாட்டுத்துறை முதன்மைச் செயலர் Dr. ராஜேந்திர குமார், இ.ஆ.ப., பாளை அண்ணா விளையாட்டரங்கத்தில் ஆய்வு

**தமிழக அரசின் சார்பில், திருநெல்வேலி மாவட்டத்தின் Monitoring Officer Dr. ராஜேந்திர குமார்,இ.ஆ.ப., அவர்கள் 22.04.2017 அன்று திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை புரிந்தார்கள். அவர்கள் காலை 10.00 மணிக்கு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கத்தை முழுவதுமாக ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி மண்டல முதுநிலை மேலாளர் திரு.பா. சிவகுமார் அவர்கள், திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு இளைஞர் நலன் அலுவலர் (ம) மேலாளர் விளையாட்டு விடுதி முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் உடனிருந்தார்கள்.**

பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கத்தில், ரூ.3.50 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 400மீ செயற்கை இழை ஓடுதளப்பணிகள், ரூ.9.50 இலட்சம் செலவில் செயற்கை இழை ஓடுதளத்தை சுற்றிப் போடப்பட்டுள்ள கம்பி வேலி அமைப்புகள், விளையாட்டு விடுதி, ரூ.10.00இலட்சம் செலவில் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வரும் நீச்சல் குளம் மற்றும் ரூ.10.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள அண்ணா விளையாட்டரங்க உடற்பயிற்சி கூடம் மற்றும் அவற்றின் உபகரணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்கள்.

நீச்சல் குளத்தின் ஆய்வின்போது, தினமும் நீச்சல் பயிற்சி பெற்று, தெற்காசிய நீச்சல் போட்டியில் பதக்கம் வென்ற செல்வன் சேது மாணிக்க வேல் போன்ற தேசிய அளவில் சாதனை படைத்து வரும் நீச்சல் வீரர், வீராங்கனைகளை பாராட்டினார்கள். பின்பு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கத்தின் அனைத்து கட்டுமான பணிகளும் சிறப்பாக உள்ளது என்றும், மேலும் இன்னும் தேவைப்படும் விளையாட்டு கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார்கள். நிகழ்ச்சியின் போது வட்டாட்சியர் திரு. ஜாகீர் ஹுசைன், நீச்சல் கழக செயலாளர் திரு. லெட்சுமணன் மற்றும் நீச்சல் பயிற்றுநர் திரு.கர்ணன் ஆகியோர் உடனிருந்தார்கள்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/–

மாவட்ட விளையாட்டு மற்றும்<br>இளைஞர் நலன் அலுவலர்,<br>திருநெல்வேலி மாவட்டம்.